# 2009 – 2015 வரையான காலப்பகுதியில் இலங்கை சீன உறவுகள்

**Nazlin Nazhath A.N.**[112]

**ஆய்வுச் சுருக்கம்**

சர்வதேச உறவுகளில் முழுமையாகவும் முறையாகவும் பங்கேற்பதற்கு ஏற்ற வகையில், ஒவ்வொரு நாடும் தனக்கென தனியான ஒரு வெளிநாட்டுக் கொள்கையை கொண்டு இயங்கி வருகின்றது. இந்தவகையில், இலங்கையின் வெளிநாட்டு உறவுகள் இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திரம் மற்றும் வர்த்தக உறவினை வெளிப்படுத்திக் காணப்படுகின்றது. கடந்த முப்பது ஆண்டு காலமாக இலங்கையில் இடம்பெற்ற இன மோதலினைத் தொடர்ந்து இலங்கை அரசானது, பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்யுத்த முடிவானது இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. யுத்தக் காலப்பகுதியில் சீனா இலங்கையில் செலுத்திய செல்வாக்கின் காரணமாக இராணுவ முரண்பாடானது முடிவினைத் தழுவியது. யுத்த காலப்பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையில் காணப்பட்ட உறவு நிலையானது யுத்த முடிவினை தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து வருகின்றது. யுத்த முடிவினை தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கமானது சீனாவுடனான உறவினை மேலும் வளர்ப்பதில் கவனம் செலுத்தியதுடன் சீனா, யுத்த முடிவினை தொடர்ந்து நாட்டினை மீள கட்டியெழுப்புவதற்கு பாரிய பங்களிப்புக்களையும் ஒத்துழைப்புக்களையும் இலங்கை அரசிற்கு வழங்கி வருகின்றது. நாட்டின் சமூக, பொருளாதார, பாதுகாப்பு நடவடிக்கைகளை தொடர்ந்தும் பேணுவதற்காக சீனாவுடனான உறவுகள் மேலும் வலுப்பெற்றன. யுத்தத்தின் பின்னரான இலங்கை அரசின் சீனா சார்பான இவ்வெளிநாட்டுக் கொள்கையானது உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. மேலும், 2009–2015 வரையிலான இலங்கை அரசாங்கத்தின் சீனா சார்பான வெளிநாட்டுக் கொள்கையானது எவ்வாறான மாற்றங்களை இலங்கை அரசியலில் ஏற்படுத்தியுள்ளது என்பதனை கண்டறிதல் என்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக முதனிலைத் தரவுகளாக நேர்காணல், வரையறுக்கப்பட்ட அவதானம் போன்றனவும் இரண்டாம் நிலைத் தரவுகளாக முன்னைய ஆய்வுகள், நூல்கள், சஞ்சிகைகள், புள்ளிவிபரங்கள் போன்றனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி, யுத்தத்தின் பின் சீனாவுடனான நெருங்கிய உறவானது இலங்கையின் அரசியல், பொருளாதார, இராஜதந்திர ரீதியில் உள்நாட்டிலும், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கு எதிரான மனித உரிமை ஆணைக்குழு மற்றும் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுடனான உறவின் விரிசல் போன்றன சர்வதேச அளவிலும் பாரிய தாக்கத்தினை செலுத்தியுள்ளன.

**பிரதான சொற்கள்:** யுத்தத்திற்குப் பிந்நதிய இலங்கை, சீனா, வெளிநாட்டுக் கொள்கை, சர்வதேச உறவுகள்

## 1. அறிமுகம்

இன்றைய உலகில் எந்தவொரு நாடும் தனித்து இயங்க முடியாது. ஏதோ ஒரு வகையில் ஏனைய நாடுகளுடன் தொடர்பினை கொண்டதாகவே ஒவ்வொரு நாடும் செயற்படுகின்றது. இந்தவகையில் ஒரு நாடு தன்னுடைய தேசிய நலன், பாதுகாப்பு, இராஜதந்திரம் என்பவற்றினை விருத்தி செய்துக் கொள்வதற்காக ஏனைய நாடுகளுடன் தொடர்பினை பேணுவதனை வெளிநாட்டுக் கொள்கை என்று குறிப்பிடலாம் (Bhambhiri , 2006). தேசிய நலனிற்கு எவ்விதமான பங்கமும் ஏற்படாத வகையில் அதனை பாதுகாத்தற் பொருட்டு ஏனைய அரசுகளுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்தி கொள்ள வேண்டும் என்பதே வெளிநாட்டுக் கொள்கையாகும்.

மறைந்த இந்திய பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள் ''தனது சர்வதேச எல்லைகளை பாதுகாப்பதன் ஊடாக ஒவ்வொரு அரசும் அதன் அரசியல் சுதந்திரத்தினையும், ஆட்புல ஒருமைப்பாட்டினையும் பேணிக் கொள்வதனை இலக்காக கொள்கின்றன. இதனை அடைவதற்கான வழிகள் வேறுபடலாம். ஆனால் அவற்றின் இறுதி இலட்சியம் அது மட்டுமே'' என வெளிநாட்டுக் கொள்கை பற்றி குறிப்பிட்டுள்ளார் (Appadurai, 1981).

To whom correspondence should be addressed: nazlinnazhath92@gmail.com

[112] Assistant Lecturer, Department of Political Science, South Eastern University of Sri Lanka.

இலங்கையில் இன மோதல் இடம் பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளை இல்லாதொழித்து இலங்கை அரசாங்கம் யுத்த வெற்றியினைப் பெற்றுக் கொள்வதனை தன்னுடைய முதல் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது. இதன் காரணமாகவே இலங்கை அரசாங்கமானது தனது வெளிநாட்டுக் கொள்கையினையும் வகுத்துக் கொண்டது.

இலங்கையில் இடம் பெற்ற யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வருவதற்காக சீன அரசாங்கம் அரசியல், பொருளாதார ரீதியில் பலதரப்பட்ட உதவிகளினை இலங்கைக்கு வழங்கி, யுத்தத்தினை முடிவடைய செய்துள்ளது. அதனை தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் அவ்வுறவினை தொடர்ந்தும் பேணும் வகையில் சீனாவுடன் நெருங்கமான உறவுகளை வளர்த்துக் கொண்டது. இவ்வரசாங்கத்தின் சீனா சார்பான வெளிநாட்டுக் கொள்கையானது எவ்வாறான தன்மையின் அடிப்படையில் செயற்பட்டது மற்றும் அதனால் இலங்கை எவ்வாறான தாக்கத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய சூழலை ஏற்படுத்திக் கொண்டது என்பதனை கண்டறிவதாக இவ்வாய்வு காணப்படுகின்றது. மேலும், யுத்த முடிவினை தொடர்ந்து இலங்கையின் சீனா சார்பான வெளிநாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றத்தினையும், அதனால் இலங்கை உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் எதிர் கொண்ட சவால்களையும் ஆராய்வதாக இவ்வாய்வு காணப்படுகின்றது.

**2. ஆய்வு பிரச்சினை**

வளர்ச்சியடைந்து வரும் உலகில் அரசுகள் ஒவ்வொன்றும் தங்களின் நாட்டு நலன்களை பாதுகாப்பதற்காக வெளிநாட்டுக் கொள்கையினை அமைத்துக் கொள்கின்றன. இலங்கை அரசானது காலணித்துவத்தில் இருந்து விடுபட்ட காலம் தொடக்கம் இன்று வரையிலும் அதன் வெளிநாட்டுக் கொள்கையானது அரசாங்கங்களின் மாறுதல்களிற்கு ஏற்ற வகையில் மாற்றமடைந்து வருகின்றன.

இலங்கையின் இறுதி யுத்த முடிவினை தொடர்ந்து வந்த மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் அரசாங்கமானது நாட்டினை கட்டியெழுப்புதல், அரசியல், பொருளாதார அபிலாசைகளின் ஊடாக நாட்டின் வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக சீனாவுடன் நெருக்கமான உறவினை கையாண்டது. இவ்வுறவானது உள்நாட்டளவிலும், சர்வதேச ரீதியாகவும் எவ்வாறான தாக்கத்தினை செலுத்தின என்பது இவ்வாய்வினுடைய ஆய்வு பிரச்சினையாகும்.

**3. ஆய்வு நோக்கம்**

2009 – 2015 வரையிலான இலங்கை அரசாங்கத்தின் சீனாவுடனான நெருங்கிய உறவுகள் இலங்கை அரசியலில் பல்துறையில் தாக்கங்களை ஏற்படுத்தியது என்பதை கண்டறிதல் என்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**4. ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது ஒரு விடய ஆய்வாக காணப்படுவதுடன் பண்பு ரீதியான தரவுகளினை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதனிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் என்ற இரு தரவுகளை அடிப்படையாக கொண்டு இவ்வாய்வு வரையப்பட்டுள்ளது. இவ்வாய்வினை பொறுத்த வரையில் முதனிலைத் தரவுகளாக, நேர்காணல், வரையறுக்கப்பட்ட அவதானம் போன்ற நுட்ப முறைகளை பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், முன்னைய ஆய்வுகள், நூல்கள், சஞ்சிகைகள், ஆவணங்கள், அறிக்கைகள், புள்ளிவிபரங்கள் போன்றன இரண்டாம் நிலைத் தரவுகளாக பெறப்பட்டுள்ளன.

நேர்காணல்

- அரசியல் உயர்குழாமினர்
  - அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகள் – 02
- நிர்வாகிகள் – 02
- இராஜதந்திரிகள் _ 02

- கல்வியாளர்கள் _ 04
- பொது மக்கள் _ 03

இவ்வாறான நுட்பங்களை பயன்படுத்தி தரவுகளை சேகரிப்பதன் மூலமாக ஆய்வு தொடர்பான தெளிவான, நம்பகரமான, உறுதியான, உண்மைத் தரவுகளை பெற்றதன் வழி ஆய்வின் நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட்டன.

**5. இலக்கிய மீளாய்வு**

பொதுவாக வெளிநாட்டுக் கொள்கை என்றால் என்ன என்பது தொடர்பாகவும் அதற்கான வரைவிலக்கணங்களை வகுப்பதிலும் பல சாராருக்கு இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வகையில் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான வரைவிலக்கணங்கள் பல அறிஞர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

*"The Domestic Roots of Indian's Foreign Policy"* என்ற நூலில் மறைந்த இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள், "எத்தகைய கொள்கையை நாம் தீர்மானித்தல் என்பது ஒரு நாட்டின் எந்த வெளிநாட்டுக் கொள்கை அந்நாட்டுக்கு உச்ச வாய்ப்பினை தரக் கூடியது என்று கடைப்பிடிப்பதிலேயே தங்கியுள்ளது. ஒரு நாடு, ஏகாதிபத்தியம் சார்பானதோ, சோசலிசம் சார்பானதோ, கம்யூனிசம் சார்பானதோ அதன் வெளிநாட்டு அமைச்சர் அந்நாட்டின் நலனையே அடிப்படையில் சிந்திக்கின்றார்" என வெளிநாட்டுக் கொள்கை பற்றி விபரிக்கையில் குறிப்பிட்டுள்ளார் (Appadurai, 1981)

அரசியல் அறிஞரான கரோல் நிக்கொல்சன் குறிப்பிடும் போது, வெளிநாட்டுக் கொள்கை என்பது, "தந்திரமானதும், பிற நாட்டுடன் இணக்கப்பாடு உடையதுமான அரசியல், பொருளாதார, வர்த்தக, கலாச்சாரத் தொடர்பின் முழுமையான வெளிப்பாடே குறிப்பிட்ட நாட்டின் வெளியுறவுக் கொள்கையாகும்" (Bhambhiri, 2006) என்றார்.

வெளிநாட்டுக் கொள்கை பற்றி பல விதமான வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், தெளிவானதொரு வரைவிலக்கணத்தினை வகுப்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. அதாவது, ஒவ்வொரு அறிஞரின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய பார்வையும், நோக்கும் வேறுபட்டே காணப்படுகின்றன. அவரவர் கால சூழ்நிலைக்கு ஏற்ற விதமாக வெளிநாட்டு கொள்கையினை வகுத்தனர். எனினும் தற்போதைய நவீன காலத்திற்கு ஏற்றவாறான வெளிநாட்டு கொள்கை பற்றிய வரைவிலக்கணத்தினை அனைவரும் உருவாக்க தவறிவிட்டனர் என்பது ஆய்வு இடைவெளியாக காணப்படுகின்றது.

இவ்ஆய்வினை மேற்கொள்வதற்கான கோட்பாட்டு ரீதியிலான முன்னைய ஆய்வுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதை போன்றே, அனுபவ ஆய்வுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதாவது, இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையினை பற்றியும், யுத்தக் காலத்தின் போதும், யுத்தத்தின் பின்னரும் இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகள் தொடர்பான ஆய்வுகளே முக்கியமாக பார்க்கப்பட்டுள்ளன.

யுத்தத்தினை தொடர்ந்து இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறாக மேற்கொள்ளப்பட்ட "Sri Lanka's foreign policy trends since 2016" என்ற கட்டுரையில் ஒரு நாட்டின் உள்நாட்டு கொள்கையின் தொடர்ச்சியே அதன் வெளிநாட்டு கொள்கை என்று கூறப்படுவதுண்டு. ஒரு நாட்டின் உள்நாட்டு கொள்கையில் ஏதாவது மாற்றம் அல்லது தடுமாற்றம் ஏற்பட்டால் அதன் தாக்கம் வெளிநாட்டு கொள்கையிலும் பிரதிபலிக்கும். இலங்கையில் தற்போதைய நிலையினை எடுத்து நோக்கினால் அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டிருக்கின்றன என இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது (Uyangoda, 2016).

இன்றைய உலகில் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளும் சீனாவின் போட்டி நாடாக சில ஊடகங்களால் வர்ணிக்கப்படும் இந்தியாவும் கூட சீனாவை புறந்தள்ளிவிட்டு எந்தவொரு உலக விவகாரங்களையும் கையாள முடியாது என்ற நிலை உருவாகியுள்ளது என கட்டுரை ஆசிரியர் Uyangoda எடுத்துக் காட்டியுள்ளார். புதிய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையும் அதன் சிறப்பியல்புகளினையும் எடுத்துக்காட்டியுள்ளதுடன் நடைமுறையின் தன்மையினை அவதானிப்பதன் மூலமாக வரையப்பட்டுள்ளது. அத்தோடு, முன்னைய அரசாங்கள் கடைப்பிடித்த வெளிநாட்டு கொள்கை பற்றிய விளக்கத்தினையும், அதனுடைய சாதக, பாதக தன்மைகளையும் எடுத்துக் கூற தவறிவிட்டது (Uyangoda, 2016).

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள சர்வதேச விசாரணை என்ற இராஜதந்திர நெருக்கடியில் இணைத்து இலங்கையினை பாதுகாப்பாக மீட்பதற்கு மிகவும் நம்பிக்கையான நண்பனாக இருந்து பணியாற்றப் போவது சீனாவேயாகும். இந்நிலையில் சீனாவுடன் இலங்கை தனது உறவினை மேலும் வலுப்படுத்தி வருகின்றதுடன் ''தந்திரோபாய கூட்டு பங்காளர்'' என்ற சுலோகத்தின் மூலம் தெற்காசிய பிராந்திய அபிவிருத்தியில் முதன்மையானதொரு இடத்தை சீனா பெற்றுக்கொள்ள இலங்கையினை பயன்படுத்தி வருகின்றது என்று ''புவிசார் தந்திரோபாய மிக்க பிரதேசத்தில் இரண்டு நாடுகளின் நலன் சார்ந்த உறவு'' என்ற கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ளது (Krishnamohan, 2014). அக்கட்டுரையானது வெளிநாட்டு கொள்கையில் இலங்கை, சீனா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள், வர்த்தக உறவுகள், சர்வதேச தலையீடுகளில் இருந்து பாதுகாத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. எனினும், இவ்வாறான உறவு நிலையினை கட்டியெழுப்பியதன் விளைவாக சர்வதேச ரீதியிலும், மேற்கத்தேய நாடுகளினால் இலங்கைக்கு ஏற்பட்ட அழுத்தங்களினையும், தாக்கங்களினையும் இக்கட்டுரை எத்தியம்பவில்லை.

பொருளாதார அடிப்படையிலும், பாதுகாப்பு அடிப்படையிலும் சீனாவினால் முன்னெடுக்கப்படும் ''முத்துமாலை'' கடற் கொள்கைக்கு இசைவான அம்பாந்தோட்டை துறைமுக விருத்தியும் குறிப்பிட்டு சொல்லக் கூடிய அம்சமாகும். மேலும் புத்தளம் மாவட்டத்தில் நுரைச்சோலை அனல் மின் நிலையத்திட்டம் மற்றும் BMICH மீளமைப்புக்கான திட்டமிடல், மன்னார் எண்ணெய் ஆய்வுத்திட்டம் என பல திட்டங்களில் சீனா - இலங்கை நட்புறவு காணப்படுகின்றது என்றும் சீனாவை பலப்படுத்துவதன் மூலம் இலங்கை மீதான இந்தியாவினதும் மேற்கினதும் அடாவடித்தனத்தை கட்டுப்படுத்தும் வெளியுறவுக் கொள்கையை உருவாக்கியது என ''இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை'' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச மட்டத்திலும், பிராந்திய அரசியலிலும், பொருளாதார போட்டியிலும் மேற்குலகிற்கும் இந்தியாவிற்கும் சீனா சவாலாக விளங்குகின்றது. இதனால் சீனாவை இலங்கை பக்கம் ஈர்ப்பதன் மூலம் காலணித்துவ, நவ காலணித்துவ சக்திகளின் செல்வாக்கினை இலங்கை அரசாங்கமானது உடைக்க முயன்றுள்ளது என இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது (ருக்ஷான், சண்முகராஜா, & குலேந்திரன், 2012).

'' Sri Lanka's post-war Foreign Policy Strategy'' எனும் கட்டுரையானது, யுத்தத்தின் போதும், யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவருவதற்கும் இலங்கை அரசானது பல நாடுகளுடன் கைகோர்த்தமையை எடுத்து காட்டுகின்றது. இந்தவகையில், சீனா, ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளுடனான உறவுவின் தன்மையும், போரினை முடிவுக்கு கொண்டு வருவதற்காக வழங்கிய ஆதரவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. எனினும், இக்கட்டுரையானது யுத்த கால கட்டங்களிலும், அதனை தொடர்ந்தும் இலங்கையில் அபிவிருத்தி மற்றும் வர்த்தக ரீதியான முன்னடைவு என்பன பற்றியதான விடயங்களை குறிப்பிடவில்லை. மேலும், இக்கட்டுரையானது, யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வருவதனை பற்றி குறிப்பிடுகின்றதே தவிர அதனால் ஏற்பட்ட தாக்கங்களினை குறிப்பிட தவறிவிட்டது (Jeganaathan, 2011).

"China Sri Lanka Economic Relations" என்ற கட்டுரையானது சீனாவுடனான இலங்கையின் வர்த்தக மற்றும் உள்நாட்டு அபிவிருத்தி போன்ற விடயங்களில் கூடிய கவனம் செலுத்தியுள்ளமையை காணலாம். மேலும், சீனாவின் நிதி தொடர்பான கொள்கைகள், நோக்கங்கள் என்பனவற்றினை முதன்மைப்படுத்தியுள்ள கட்டுரையாசிரியர், இவ்வாறான உறவின் விளைவாக இலங்கைக்கு ஏற்பட்ட சர்வதேச அழுத்தங்களை குறிப்பிட மறந்து விட்டார். மேலும், பொதுவாகவே இக்கட்டுரையானது, பண்பு ரீதியான தரவுகளை கொண்டமைந்துள்ளது, எண் ரீதியான தரவுகளையும், புள்ளிவிாரங்களையும் இக்கட்டுரை எடுத்துக்காட்டவில்லை (Kelegama, 2014 ).

கணேசலிங்கம் என்ற நூலாசிரியர் "*இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை 1948 – 2010*" தன்னுடைய நூலில், இலங்கை அரசாங்கத்தின் மேற்கிற்கு எதிரான வெளிநாட்டு கொள்கை பற்றியும், அதனால் சர்வதேச ரீதியாக இலங்கைக்கு ஏற்பட்ட தாக்கங்களினை பற்றியும் எடுத்துக் காட்டியுள்ளார் (கணேசலிங்கம், 2014). மாறாக, மேற்கு சாரா நாடுகளுடனான உறவின் தன்மையையும், அதனால் இலங்கையில் எவ்வாறான தாக்கங்கள் ஏற்பட்டது என்பதனையும் இக்கட்டுரை எத்தியம்பவில்லை. இக்கட்டுரையின் ஆய்வு முறையியலை எடுத்து நோக்கினால், இக்கட்டுரையானது, பண்பு ரீதியான தரவுகளையும், இரண்டாம் நிலைத் தரவுகளாக சஞ்சிகைகள், நூல்கள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும், புள்ளிவிபர ரீதியாகவும், அவதானிப்பதன் மூலமும் தரவுகள் சேகரிக்கப்படாமையை எடுத்துக் காட்டலாம். மேற்கிற்கு எதிரான லங்கையின் வெளிநாட்டுக் கொள்கை பற்றி பல்வேறு கட்டுரைகளும், நூல்களும் வெளிவந்திருந்தாலும், ஒன்றினுடைய குறைப்பாட்டினை மற்றொன்று நிவர்த்தி செய்வதாக அமைகின்றது.

**6. பகுப்பாய்வும் முடிவுகளும்**

இவ்வாய்வுக்கான தரவுகளும் தகவல்களும் பல்வேறு மூலங்களில் இருந்து பெறப்பட்டுள்ளதுடன் அவை பண்பு ரீதியான ஆய்வு முறையினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு ஆய்வு முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவுகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

**இராஜதந்திர உறவு**

இலங்கையில் இடம் பெற்ற ஆயுத மோதலை தொடர்ந்து இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்த சீனா சார்பான வெளிநாட்டுக் கொள்கை காரணமாக இலங்கை மேற்கு நாடுகளின் உறவில் இருந்து மெதுவாக விலகி சீனாவுடன் நெருக்கமான உறவினை வளர்த்துக் கொண்டுள்ளது. யுத்தக் காலத்திலும் யுத்த முடிவினை தொடர்ந்தும் சீனாவுடன் இலங்கை அனைத்து வகையிலான பரஸ்பர உறவுகளையும் வளர்த்து வருகின்றது.
எடுத்துக்காட்டாக: யுத்தத்தினை தொடர்ந்து இலங்கையின் உள்நாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்கள் சீனாவின் உதவியுடன் நடைப்பெற்று வருகின்றது. 2012ம் ஆண்டு சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு மேற்கொண்ட முதல் விஜயம் இதுவாகும் (http://thediplomat.com/2014/03/).

இலங்கையின் இறுதி யுத்தம் முடிவடைந்த பின்னராக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அயல் நாடாக இந்தியாவிற்கோ, ஏனைய நாடுகளுக்கோ விஜயம் சென்றதை விட சீனாவிற்கே அதிகமான விஜயங்களினை மேற்கொண்டிருந்தார். இரு நாடுகளுக்கும் இடையில் அரசியல் உறவுகளின் தொடர்ச்சியாக 2013ம் ஆண்டு சீனாவின் புதிய ஜனாதிபதியாக Xi Jinping பதவியேற்றதன் பின்னர் இலங்கை – சீனாவிற்கு இடையிலான உறவானது மேலும் வலுவடைந்துள்ளது (Goodman, 2014). இதன்போது இலங்கை ஜனாதிபதியின் சீன விஜயத்தின் மூலம் இலங்கை ஜனாதிபதி மற்றும் சீன ஜனாதிபதி ஆகியோரிற்கு இடையில் சீனாவின் மக்கள் மகா மண்டபத்தில் (Great Hall of the People) பேச்சுவார்த்தை நடைப்பெற்றது. இதன்போது, சீன ஜனாதிபதி பின்வருமாறு கருத்துரைத்தார். "இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் ஏனைய நாடுகள் தலையிடுவதனை சீனா வன்மையாக

கண்டிக்கின்றது'' என்ற கருத்தினை தெரிவித்திருந்தமை இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவினை வெளிப்படுத்துகின்றது.

மேலும், யுத்தக் காலப்பகுதியில் இலங்கையில் அதிகளவிலான மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றுள்ளது என்ற வகையில் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை கொண்டுவந்த போது, இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டு இலங்கையின் இறைமையை பாதுகாத்த நாடாக சீனா அடையாளப்படுத்தப்படுகின்றது என விரிவுரையாளர் ஒருவர் இது தொடர்பாக விளக்கமளித்திருந்தார் (நேர்காணல் 03: 08.02.2017).

சீனாவுடனான உறவானது யுத்தத்தினை தொடர்ந்து மேலும் அதிகரித்து வருகின்றது. இலங்கையில் சீனா செயற்படுத்துகின்ற பல்வேறு திட்டங்களில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சீனர்கள் இருப்பதாக லங்கா ஈ நியூஸ் இணையத்தளம் அறிக்கை வெளியிட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் சீனாவின் செம்படை உறுப்பினர்களும் சிறைக்கைதிகளுமாக காணப்படுகின்றனர் என்ற விடயம் ஆய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி இலங்கையில் இருந்தும் அதிகளவானவர்கள் சீனாவிற்கான விஜயங்களை மேற்கொள்கின்றனர். இது தொடர்பாக விரிவுரையாளரிடம் வினவிய போது அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

> ''இலங்கைக்கு சீனா அதிகளவான உதவிகளை வழங்கி வருகின்ற ஓர் நாடு என்ற ரீதியில், இலங்கை பிரஜைகள் சீனாவிற்கு அழைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. வருடாந்தம் 1200 ற்கும் அதிகமானவர்கள் சீனாவிற்கு சென்று பயிற்சிகளை பெற்று வருகின்றனர்''

என்ற கருத்தினை குறிப்பிட்டிருந்தார் (நேர்காணல் 03: 08.02.2017).

**வர்த்தக ரீதியில் அமைந்த உறவுகள்**

யுத்தம் இடம் பெற்று முடிவுற்ற காலப்பகுதியில் சீனாவுடனான வர்த்தக உறவுகளின் தொடர்ச்சியாக 2009க்கு பின்னர் யுத்த முடிவினை தொடர்ந்தும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் புதுப்பிக்கப்பட்டன. அதாவது, சீனாவில் இருந்து இலங்கையின் இறக்குமதி பங்குகள் 2012ம் ஆண்டு ஆகும் போது 13.9 வீதமாக காணப்பட்டதுடன் சீனாவிற்கான இலங்கையின் ஏற்றமதி பங்குகள் 2012ம் ஆண்டு 1.2 வீதமாக அமைந்திருந்தது. இதன்படி, இருபக்க வர்த்தகமும் வளர்ச்சி பெற்று வந்ததுடன் வர்த்தக சமநிலையானது இரு பக்கமும் பலமான நிலையில் அமைந்திருந்தன (Kelegama, 2009). இது தொடர்பாக விரிவுரையாளர் ஒருவரிடம் வினவிய போது அவர் ''இலங்கையின் கட்டுமான பணிகளில் சீனாவின் கடனுதவி பிரதான பங்கு வதித்து வருகின்றது. இதன் மூலம் இலங்கைக்கு கடன் உதவி வழங்கும் நாடுகளில் முதன்மை பாத்திரத்தினை சீனா கைப்பற்றியுள்ளது என்ற கருத்தினை குறிப்பிட்டிருந்தார் (நேர்காணல் 03: 08.02.2017).

அபிவிருத்தி திட்டங்களுக்கான கடன் உதவிகளை வழங்கி வரும் பிரதான பங்காளியாகவும் சீனாவே இருந்து வருகின்றது. குறிப்பாக 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான கொழும்பு துறைமுகம், மத்தலை விமானநிலையம் (300 மில்லியன் அமெரிக்க டொலர்), ஹம்பாந்தோட்டை துறைமுக கட்டுமானம் (1.5 பில்லியன் அமெரிக்க டொலர்), இலங்கைக்கான முதலாவது நான்கு பக்க அகல அதிவேகப் பாதை- First Four-lane expressway (520 மில்லியன் டொலர) மற்றும் தேசிய திரையரங்கு போன்றவற்றினை இலங்கை இது வரையிலும் பெற்றுள்ளது. ஒப்பீட்டு ரீதியில் பார்க்கும் போது ஐரோப்பிய நாடுகள் 5 சத வீதத்தினால் கடன் கொடுப்பதாகவும், சீனா இரண்டு சதவீதத்தினால் கடன் வழங்குவதாகவும் ஆய்வின் போது கண்டறியப்பட்டுள்ளது (Samaranayake, 2011).

யுத்தம் முடிவடைந்த பின்னர் உட்கட்டமைப்பு பணிகளுக்கும் மீள்கட்டமைப்பு பணிகளுக்கும் வேண்டிய 8 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடன் உதவிகளை சீனா வழங்கியிருந்தது மூன்று தசாப்த காலமாக தொடர்ந்த யுத்தம் காரணமாக ஏற்பட்டிருந்த அழிவுகளை சீர் செய்து நாட்டை அபிவிருத்தி

பாதையில் கொண்டு செல்வதற்கு மாத்திரமன்றி இலங்கையை சர்வதேச பொருளாதாரத்தினுள் கொண்டு செல்வதற்கும் நடவடிக்கைகளை எடுத்திருந்தது (http://www.ft.lk/2014/09/17/china-sri-lanka-economic-) அதன் விளைவாகவே ஹம்பாந்தோட்டை துறைமுகம் புதுப்பிக்கப்பட்டது. அதற்கு துணையாக மத்தளை சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டது. இது தொடர்பாக அமைச்சர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், சர்வதேச பொருளாதார தொடர்புகளுக்காக ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா தனது பட்டுப்பாதை திட்டத்தில் உள்வாங்குவதற்கும், அதற்கு பதிலாக அங்கு இராணுவ தளம் ஒன்றை நிறுவுவதற்கும் இலங்கை அரசாங்கம் அனுமதியளித்திருந்தது போன்ற விடயங்களை குறிப்பிட்டார் (நேர்காணல் 06: 20.01.2017).

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது சீனா அரசாங்கத்தினால் அதிகமான அளவு முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதனுடைய தொடர்ச்சியாகவே யுத்தத்திற்கு பின்னரான இலங்கையிலும் முதலீடு ரீதியிலான உறவு வலுவடைந்து வருகின்றது. இது தொடர்பாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரிடம் வினவிய போது அவர் பின்வருமாறு கருத்து வெளியிட்டார்.

“இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான உறவானது பல வருடகால வரலாற்றினை கொண்டிருந்த போதிலும், இலங்கையில் இடம் பெற்ற யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் அது பாரிய வளர்ச்சியடைந்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவானது வளர்ச்சியடைய சீனாவினுடைய பொருளாதார கொள்கை முக்கிய காரணமாகும். அதாவது, சீனாவினுடைய பட்டுப்பாதையில் இலங்கை அமைந்துள்ளமை சீனா இலங்கையில் தாக்கத்தினை செலுத்தியமைக்கான காரணமாகும்” என்றார் (நேர்காணல் 04: 20.02.2017).

**இந்தியாவுடனான உறவு**

புவிசார் அரசியல் பாரம்பரியத்திற்குள்ளும் இந்தியாவின் பாதுகாப்பு எல்லைக்குள்ளும் இலங்கை அமைந்திருந்தது. இதனால் இந்தியா இலங்கை சார்ந்தும் இலங்கை இந்தியா சார்ந்தும் செயற்பட முனைந்தன. இந்தவகையில் யுத்தத்தின் பின்னரான மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் அரசாங்கம் அவ்வகை ஒத்துழைப்பில் அதிக நெருக்கம் காட்டி வந்தது. எனினும் காலப்போக்கில் இவ்வுறவு நிலையில் தளம்பல் ஏற்பட்டுள்ளதுடன் இலங்கையின் இன மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்காக சீன அரசாங்கம் உதவியமையின் காரணமாக அவற்றின் அடிப்படையிலேயே இலங்கை அரசின் தீர்மானமும் அமைந்திருந்தது. இந்நிலையில் இந்தியாவுடனான இலங்கையின் நட்பில் விரிசல் நிலையை தோற்றுவித்து.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு நிலையானது யுத்த முடிவிற்கு பின் பல்வேறு கோணங்களில் பரிமாணம் அடைந்திருந்தது. குறிப்பாக அரசியல் ரீதியாகவும், பொருளாதார துறைகளிலும், அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளுதல் என்பவற்றுடன் மனித உரிமை என்ற விடயத்திலும் இரு நாடுகளுக்கும் இடையிலான நிலைப்பாடுகள் வித்தியாசமானதாக அமைந்திருந்தன (Pethiyagoda, 2015).

யுத்தக்காலத்திலும் அதனை தொடர்ந்தும் சீனாவுடனான இலங்கை கையாண்ட உறவானது இந்தியாவிற்கு அதிர்ப்தியினை ஏற்படுத்தியதுடன், இந்தியா இலங்கைக்கு பல வழிகளில் தொடர்ந்து அழுத்தங்களை கொடுத்து வந்தது. எனினும் இலங்கையின் வெளிநாட்டு உறவுகளும், செயற்பாடுகளும் சீனா சார்பானதாகவே காணப்பட்டது. இது தென்னாசியாவின் பிரதான நாடாகவும், இலங்கையின் அயல் நாடாகவும் காணப்படும் இந்தியாவிற்கு கௌரவ பிரச்சினையாக அமைந்திருந்தது (India and Neighbours, CNF).

இலங்கையில் இடம் பெற்ற இறுதி யுத்தக் காலக்கட்டத்தில் அதிகளவான மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு எதிராக அறிக்கை வெளியிட்டது. அதனுடன் இணைந்து மேற்கு நாடுகளும் யுத்தக் குற்றங்கள், மனிதாபிமான சட்ட மீறல்கள் என்பன இலங்கையில் இடம் பெற்றுள்ளது என இலங்கைக்கு எதிரான தீர்மானத்தினை கொண்டுவந்த போது இந்தியாவின்

நிலைப்பாடு இலங்கை - இந்திய உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தியது (Aliff, 2015). அதாவது இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தது.

இலங்கையில் இடம் பெற்ற பொதுநலவாய மாநாடு தொடர்பாக இந்தியாவின் செயற்பாடுகள் இந்தியா - இலங்கை உறவில் தாக்கத்தினை செலுத்தியது. பொது நலவாய மாநாடு இலங்கையில் நடைப்பெறுவதற்கு இந்தியாவிடம் இருந்து எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டமை இதற்கான காரணமாகும் (Sharma, n.d ). யுத்த முடிவினை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் ரீதியிலான உறவானது பாதிப்படைந்துள்ளது. இந்த வகையில் இலங்கையின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் இந்தியா பல்வேறு அழுத்தங்களை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கி வந்தமை இரு நாடுகளுக்கும் இடையில் விரிசல் நிலைமையை தோற்றுவித்தது (Paranjpe, Abhyankar, n.d). இதனடிப்படையில் இந்திய அரசாங்கமானது தொடர்ந்தும் இலங்கைக்கு அழுத்தங்களை வழங்கி வந்ததுடன், அதனை இலங்கை அரசாங்கம் பொருட்படுத்தாமல் சீனாவிற்கு சார்பானதொரு வெளிநாட்டுக் கொள்கையினை அமைத்துக் கொண்டது. இதன்படி இந்தியா இலங்கையை தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான பல செயற்பாடுகளையும் முயற்சிகளையும் மேற்கொண்டாலும் பெரும்பாலும் அவை தோல்வியிலேயே முடிவடைந்தது. இந்தவகையில் இலங்கை மற்றும் சீனாவிற்கு இடையிலான உறவானது பெரும் நெருக்கடிகளையும், சவால்களையும் இந்தியாவிற்கு ஏற்படுத்தியமை இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர ரீதியிலான உறவானது பாதிப்படைய காரணமாக அமைந்தது என்று விரிவுரையாளர் ஒருவரின் கருத்திலிருந்து தெரிய வந்தது (நேர்காணல் 02: 02.03.2017).

**மேற்கு நாடுகளின் எதிர்ப்பு நிலை**

யுத்தத்தின் பின்னர் மேற்கு நாடுகள் இலங்கைக்கு எதிராக செயற்பட்டது. இந்நிலை இலங்கை அரசாங்கம் தானாகவே ஏற்படுத்தி கொண்ட ஒன்றாகும். இது தொடர்பில் அதிபர் ஒருவர் விபரிக்கையில் "யுத்தக் காலப்பகுதியில் மேற்கு நாடுகளிற்கு எதிரானதொரு வெளிநாட்டுக் கொள்கையினை கடைப்பிடித்தமையே யுத்த முடிவினை தொடர்ந்து இந்நாடுகள் இலங்கைக்கு எதிராக செயற்பட வாய்ப்பாக அமைந்ததுடன் சீனாவிற்கு சார்பான இலங்கையின் வெளிநாட்டு கொள்கை மேற்கு நாடுகளின் எதிர்ப்பினை இலங்கை அரசாங்கம் பெற காரணமாக அமைந்தது" என்றார் (நேர்காணல் 08: 18.01.2017). இது தொடர்பாக பொது மக்களிடம் வினவிய போது அவர்கள், இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கையின் விளைவே மேற்கு நாடுகளில் இருந்து வரும் நன்கொடைகள், கடன் உதவிகள் மற்றும் முதலீடுகள் என்பன தடை செய்யப்பட்டது. இது யுத்தத்திற்கு பின்னர் இடம் பெறக் கூடிய தேச அபிவிருத்திக்கு தடையாக அமைந்தது என நேர்காணலின் போது தெரிய வந்தது. போர் குற்றங்களை காரணம் காட்டியே ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா தீர்மானத்தை நிறைவேற்றியது. இதனையடுத்து இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவில் மேலும் விரிசல் ஏற்பட்டது. இதனால் இலங்கைக்கு கொடுக்கும் உதவியில் 29 சத வீதம் அதாவது, 11 மில்லியன் டொலரை அமெரிக்கா குறைத்துக் கொண்டது. இது இலங்கையின் பொருளாதாரத்தில் கணிசமான அளவு பாதிப்பினை செலுத்தியுள்ளது (Noorbakhsh, Paloni, & Youssef , 2001).

யுத்தத்திற்கு பின்னர் இலங்கை சர்வதேச ரீதியாக எவ்வாறான தாக்கங்களினை எதிர் நோக்கியது என்ற வினாவிற்கு, சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் பின்வருமாறு பதிலளித்தார். "இலங்கை அரசாங்கத்தின் மேற்கு நாடுகளிற்கு எதிரான வெளிநாட்டு கொள்கை மற்றும் யுத்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களின் காரணமாக, ஐரோப்பிய ஒன்றித்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுக்கொண்டிருந்த GSP+ வரிச் சலுகை நீக்கப்பட்டது. இந்நிலைமையானது இலங்கை பொருளாதார ரீதியாக பாதிப்படைவதற்கு காரணமாக அமைந்தது" என்றார் (நேர்காணல் 01: 07.02.2017). பொருளாதார ரீதியாக இலங்கை எதிர் நோக்கிய பெரும் சவால் மிக்க ஒரு விடயமாக இது கருதப்படுகின்றது

மேலும், இலங்கையில் இருந்து பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய யூனியனிற்கு மீனை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பினை இலங்கை பெற்றிருந்தது. யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் இவ்வாறான நிலைப்பாடு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. வர்த்தக ரீதியிலான செயன்முறையில் மேற்கு நாடுகள் பாரபட்சமான முறையில் நடந்துக்கொண்டதுடன் பணப் பெறுமானம், வருமானம் போன்றன குறைவடைந்தது என நிர்வாகத்துறை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார் (நேர்காணல் 09: 22.01.2017).

கல்வி மேற்பார்வை அமைச்சர் ஒருவர், பொதுநலவாய தலைவர்களின் மாநாடு இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை அங்கத்துவ நாடுகளில் இடம் பெறுவது வழக்கம். இதன்படி யுத்தத்திற்கு பின்னர் இலங்கையில் இம்மாநாடு நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிலையில், இம்மாநாட்டினை இலங்கையில் நடாத்துவதற்கு பல நாடுகள் தன்னுடைய எதிர்ப்பினை தெரிவித்துள்ளன. இவற்றில் பிரதானமாக கனடாவினை எடுத்துக்காட்டலாம். இம்மாநாடு இலங்கையில் நடைபெறுவதற்கு தடையாக இலங்கை சீனாவிற்கு இடையிலான நெருங்கிய உறவும், இறுதி யுத்தத்தின் போது இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுமே காரணமே என கருத்துரைத்தார் (நேர்காணல் 07: 25.01.2017).

**உள்நாட்டு ரீதியிலான தாக்கங்கள்**

இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தர இலங்கையினுடைய அமைவிடமும் ஓர் காரணமாகும். எனினும் இலங்கைப் போர்க் குற்ற விடயங்களை ஐக்கிய நாடுகள் சபையில் முதன்மைப்படுத்தப்பட்டதன் பின்னர், இலங்கையின் சுற்றுலாத்துறை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இதன் விளைவாக இலங்கை அரசானது கணிசமான அளவு அன்னிய செலாவானியை இழந்துள்ளதுடன், பொருளாதார முன்னேற்றத்திற்கும் இது பெரும் சவாலாகவே உள்ளது (http://nerutha.blogspot.com/2014/12/blog-post). சீனாவுடன் கொண்டிருந்த நெருக்கமான உறவே உள்நாட்டு ரீதியிலான தாக்கங்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளன.

மேலும், யுத்த குற்றச்சாட்டுக்கள், கடன் சுமைகள், பாதுகாப்பு துறைக்காக தொடரும் அதிக நிதி ஒதுக்கீடுகள், பலவீனமடையும் ஏற்றுமதி துறை, வேலையின்மை பிரச்சினை, குறைவடைந்து செல்லும் வெளிநாட்டு பெறுமதி, மந்தமான பொருளாதார வளர்ச்சி போன்றன யுத்தத்தின் பின் இலங்கை எதிர் நோக்கிய சவால்களாகும் (De Alwis, 2010).

யுத்தத்தின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மேற்கு நாடுகளுடனான உறவிலிருந்து விலகி சீனாவுடன் உறவினை வளர்த்துக் கொள்வதன் மூலமாக சர்வதேச ரீதியிலான அழுத்தங்களில் இருந்து இலங்கையை பாதுகாப்பதற்காக பல்வேறு இராஜதந்திர நுட்ப முறைகளை கையாண்டிருந்தது. எனினும் யுத்தத்தின் பின்னரான அவ்வாறான இராஜதந்திர உறவு நிலையானது தோல்வியடைந்துள்ளமை கலந்துரையாடல்களின் போது தெரியவந்தது (நேர்காணல் 05: 19.01.2017).

**சர்வதேச ரீதியிலான தாக்கங்கள்**

யுத்தத்திற்கு பின்னான இலங்கையின் அபிவிருத்தியில் இலங்கை முகம் கொடுக்கும் மிகப் பெரும் சவாலாக யுத்தக் குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றன. இவ் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் காரணமாக பல வழிகளிலும் இலங்கை பின் தங்கிய நிலையினை அடைந்துள்ளதுடன் சர்வதேச ரீதியில் தன்னுடைய கௌரவத்தினையும் இழந்து நிற்கின்றது. இவற்றில் முக்கியமாக ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைப் பிரச்சினை தலைத்தூக்கியதிலிருந்து இலங்கை தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு பிரதான காரணம் யுத்த காலத்தில் இலங்கை கையாண்ட வெளிநாட்டுக் கொள்கை மற்றும் இலங்கையினுடைய நிலைப்பாடுகள் போன்றனவாகும். இலங்கையின் போர்க் களத்தில் எழுந்த மனித உரிமை மீறல்கள் பற்றிய பிரசாரத்தினை மேற்கு நாடுகள் ஆரம்பிப்பதற்கு முன்னரே மனித உரிமை அமைப்பினை இலங்கை அரசாங்கம் ஆரம்பித்தமையானது முக்கிய விடயமாகும் என சட்டத்தரணி ஒருவர் குறிப்பிட்டார். மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், இவ்வகை தந்திரோபாயத்தினுள்ளேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவினால் இலங்கை அரசிற்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்பட்டது என்றார் (நேர்காணல்

10: 19.01.2017). யுத்தக் காலத்தில் மஹிந்த அரசாங்கம் கடைப்பிடித்த மேற்கிற்கு எதிரான வெளிநாட்டுக் கொள்கை யுத்த முடிவினை தொடர்ந்து இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை கொண்டு வந்து இலங்கையை சர்வதேசத்தின் பார்வையில் குற்றவாளியாக நிறுத்த காரணமாக அமைந்தது. மேலும், சர்வதேச மனிதாபிமான சட்டம், சர்வதேச மனித உரிமைகள் சட்டம் ஆகியவற்றினை யுத்தம் இடம் பெற்ற காலத்தில் இலங்கை அரசாங்கம் மீறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன், இதற்கான பொறுப்பினை ஏற்குமாறு இலங்கைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டதுடன், இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியிலான அழுத்தங்களிற்கு முகம் கொடுக்கவும் நேரிட்டது (Noorbakhsh, Paloni, & Youssef, 2001).

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட மேற்படி குற்றச்சாட்டுக்களை தன்னுடைய இராஜதந்திர திறமை மூலமாக தோற்கடிப்பதில் இலங்கையின் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தோல்வியினை சந்தித்து வந்துள்ளது. இவற்றில் முக்கியமான குற்றச்சாட்டுக்களாக வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்களைக் கொலை செய்தமை, 2008ம் ஆண்டு சர்வதேச கண்காணிப்புக்குழு உறுப்பினர்களை வெளியேற்றியமை, சுயாதின விசாரணைக்கு இடமளிக்காமை, சனல் 4 வின் குற்றச்சாட்டுகளுக்கு முறையான பதில் வழங்காமை போன்றன எடுத்துக்காட்டப்படுகின்றது.

**பரிந்துரைகள்**

- இலங்கை அரசாங்கம் சீனா சார்பான கொள்கையினை மாத்திரம் கடைப்பிடிக்காமல், அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையினை கடைப்பிடித்தல்.
- யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வருவதில் மேற்குசாரா நாடுகளை போன்று, மேற்கு நாடுகளும் தன்னுடைய பங்களிப்பினை செய்திருந்தன. இதனை கருத்திற் கொண்டு மேற்கு நாடுகளுடன் உறவுகளை பேணுதல்.
- மேற்கு நாடுகள் இலங்கைக்கு எதிராக செயற்பட்டுக்கொண்டிருந்த நிலையில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவிகள் தேவைப்பட்டதுடன் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு சார்பாக ஆதரவு தெரிவிப்பதற்கு ஏனைய நாடுகளினுடைய உதவி அவசியமானதாக இருந்தமையால், அனைத்து நாடுகளுடனும் நல்லுறவினை பேணுதல்.
- இலங்கையில் மேற்கு சார்பான வெளிநாட்டு கொள்கையோ, மேற்கு சாராத வெளிநாட்டுக் கொள்கையோ கடைபிடிக்காமல், கலப்பு வெளிநாட்டுக் கொள்கையினை (Hybrit Foreign Policy) கடைப்பிடிப்பது சிறந்ததாகும்.
- சீனா, அமெரிக்கா, இந்தியா ஆகியன சர்வதேச மட்டத்தில் பொருளாதார, அரசியல், இராணுவ பலம் கொண்ட மூன்று பிரதான சக்திகளாகும். பிரதானமாக இவற்றினை மையமாகக் கொண்டே வெளிநாட்டுக் கொள்கையை அமைத்துக் கொள்ளல்.
- இலங்கை அரசாங்கம் எதிர்க்கொள்ளும் பாரிய சவால்களை வெற்றிக்கொள்வதற்காக ஏனைய நாடுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வதுடன், இராஜதந்திர விஜயங்களையும் மேற்கொள்ளல்.

**முடிவுரை**

இன்றைய உலகில் அபிவிருத்தி அடைந்த அல்லது அபிவிருத்தி அடைந்து வரும் அனைத்து நாடுகளும் தனித்து இயங்க முடியாது. ஏதோ ஒரு வகையில் ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் தொடர்பினை கொண்டதாகவே காணப்படுகின்றது. சுமார் மூன்று தசாப்த காலமாக இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற ஆயுத மோதலானது 2009ம் ஆண்டு மே மாதம் 18ம் திகதி இலங்கை அரசு யுத்த வெற்றியினை பெற்றுக் கொண்டது. யுத்தக் காலத்தில் இலங்கை கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கை, யுத்த முடிவினை தொடர்ந்து இலங்கை சர்வதேச ரீதியாக பல சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. மேற்கு நாடுகளில் இருந்து விலகிய வெளிநாட்டுக் கொள்கையின் தொடர்ச்சியாகவே யுத்தத்திற்கு பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை அமைந்திருந்தது. இந்தவகையில் இன மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்காக இலங்கை

அரசாங்கத்திற்கு பெரிதும் பங்களிப்பு செய்த நாடாக சீனா காணப்படுகின்றது. யுத்தத்தின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவினுடைய அரசாங்கம் அதிகளவாக சீனா சார்பான கொள்கையை கடைப்பிடித்ததன் விளைவாக இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார மற்றும் இராஜதந்திர ரீதியிலான உறவு நிலை மேலும் வலுப்பெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இவ் நெருங்கிய உறவானது உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. யுத்தக் காலப்பகுதியில் அதிகளவான மனித உரிமை மீறல்களை இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்தது என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் இலங்கைக்கு எதிராக செயற்பட்டது. மேலும், யுத்தத்தின் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் புதிய போக்கில் சீனாவியுடைய உள் நுழைவானது அமெரிக்கா மற்றும் இந்தியாவிடமிருந்து இலங்கை விலகுவதன் ஆரம்பமாக காணப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகளின் தன்மையானது சர்வதேச ரீதியில் பாரிய அழுத்தங்களை ஏற்படுத்தியதுடன், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பல்வேறுபட்ட சவால்களிற்கு முகம் கொடுக்கக் கூடிய நிலையும் இலங்கை அரசிற்கு ஏற்பட்டது.

**நன்றியுரை**

இவ்வாய்வினை சிறப்பாக செய்து முடிப்பதற்குரிய அறிவினையும், ஆற்றலினையும் தந்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே எனது முதற்கண் நன்றிகளை தெரிவித்துக் கொளகின்றேன். "இலங்கை சீன உறவுகள்" என்ற ஆய்வினை செவ்வனே செய்து முடிப்பதற்கு பல வழிகளிலும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். இவ்வாய்வினை சிறப்பாக மேற்கொள்வதற்கு உதவிய எனது அன்புப் பெற்றோருக்கும், தேவையான விபரங்களையும், தரவுகளையும், தகவல்களையும் தந்துதவிய அரச திணைக்கள அதிகாரிகளுக்கும், உத்தியோகத்தர்களுக்கும், இது தவிர ஏனைய உதவிகளைப் புரிந்த அனைவருக்கும் எனது நன்றிகள்.

**உசாத்துணைகள்**

1. Aliff, S.M. (2015). *Indo – Sri Lanka relations after the LTTE*: Promlems & Prospects. Journal of Emerging Trends in Educational Research and Policy Studies (JETERAPS).
2. Appadurai, A. (1981). The Domestic Roots of Indian's Foreign Policy, Dhelhi: Oxford University Press.
3. Bhambhiri, C.P. (2006. October – December). ***Indian foreign policy a more varied menu***. Indian Quarterly vol.2
4. China – Sri Lanka economic affiliations: Trends and opportunities. (2014). Retrieved from http://www.ft.lk/2014/09/17/china-sri-lanka-economic-affiliations-trends-and-opportunities
5. De Alwis, M. (2010). *The China Factor in post war Sri Lanka*. Taylor & Francis online. Inter Asia cultural Studies. Retrieved from http://www.tandfonline.com/page/terms-and-conditions
6. **India and Neighbours.** CNF
7. Jack Goodman. (2014). ***Sri Lankan's Growing Links with China***. Retrieved from http://thediplomat.com/2014/03/sri-lankas-growing-links-with-china/
8. Jayadeva Uyangoda. (2016, January 16). ***Sri Lanka's foreign policy trends since 2016***. Daily News
9. Jeganaathan, J. (2011, April 21). ***Sri Lanka's post-war Foreign Policy Strategy**:* IPCS
10. Kadira Pethiyagoda. (2015, May 01). ***India v. Chiina in Sri Lanka lessons for rising powers***

11. Kelegama, S. (2009 September.25). *China – Sri Lanka Economic Relations:* Presentation to the Sri Lanka – China Business Forum.

12. Kelegama, S. (2014 May.05). *China – Sri Lanka Economic Relations*. Published by SAGE.

13. Krishnamohan, T (2013 May). ***Pakistan Provided assistance to Sri Lainka's Civil War***

14. Nilanthi Samaranayake. (2011). ***Are Sri Lanka's relations with China Deepening?*****:** An analysis of Economic, Military and Diplomatic data

15. Noorbakhsh, F., Paloni,A., & Youssef , A. (2001). ***Human Capital and inflows to Developing Countries***

16. Paranjpe,S., Abhyankar, R. (n.d). ***India and Sri Lanka***: Future Imperfect. Indian council of world Affairs. New Delhi

17. Pathiyagoda, K. (2015). India V. China in Sri Lanka Lessons for rising Powers. Retrieved from http://www.brookings.edu/blogs/order-from-chaos/posts/2015/05/01-china-india-sri-lanka-pethiyagoda

18. Pethiyagoda, K. (2015, May 01). ***India v. Chiina in Sri Lanka lessons for rising powers***

19. Rashmi Sharma. (n.d). ***SAARC*** : Concept growth and development . Regal Publications. New Delhi: 110027

20. கணேசலிங்கம், கே.ரீ. (2014) . **இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை 1948 -2010**, குமரன் புத்தக இல்லம் இ கொழும்பு சென்னை

21. ராஜரட்ணம் ருக்ஷான், சுபாஜினி சண்முகராஜா, & தட்சாயினி குலேந்திரன். (2012). ***இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை [1948 – 2010].*** குமரன் புத்தக இல்லம்: கொழும்பு – சென்னை

22. ***யுத்தத்திற்கு பின்னர் தேசத்தை கட்டியெழுப்புவதில் இலங்கை எதிர் நோக்கும் சவால்கள்.*** (2014). Retrieved from http://nerutha.blogspot.com/2014/12/blog-post_7.html

**நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள்**

1. S.M. ஆலிஃப், சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில். (நேர்காணல் 01: 07.02.2017)
2. M.M பாஸில், விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில். (நேர்காணல் 02: 02.03.2017)
3. Dr.M.S அஸீஸ், விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு. (நேர்காணல் 03: 08.02.2017)
4. Dr.M.S அனீஸ், சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு. (நேர்காணல் 04: 20.02.2017)
5. S.L. மன்சூர், கல்வி அபிவிருத்தி வட்டத் தலைவர், குடிவரவு குடி அகழ்வு திணைக்கள உத்தியோகத்தர், கொழும்பு. (நேர்காணல் 05: 19.01.2017)
6. ரவீந்திர சமரவீர, அமைச்சர், தொழில் மற்றும் தொழில் ராஜாங்க அமைச்சர், பதுளை பாராளுமன்ற உறுப்பினர். (நேர்காணல் 06: 20.01.2017)
7. ஹேமா ரட்நாயக்க, அமைச்சர், கல்வி மேற்பார்வை அமைச்சர், ஊவா மாகாண சபை உறுப்பினர். (நேர்காணல் 07: 25.01.2017)
8. I.A. நஹீம், அதிபர், அந்நூர் முஸ்லிம் வித்தியாளயம், குருத்தலாவை. (நேர்காணல் 08: 18.01.2017)
9. A.N.N. நுஸ்ரத், அதிகாரி, இலங்கை நிர்வாக சேவை அதிகாரி, கொழும்பு. (நேர்காணல் 09: 22.01.2017)
10. T.F. சகீலா, சட்டத்தரணி, குருத்தலாவை. (நேர்காணல் 10: 19.01.2017)
11. J.A அனாஸ். வியாபாரி, வெலிமடை. (நேர்காணல் 11: 28.01.2017)
12. T.M. முபாரக், வியாபாரி, குருத்தலாவை. (நேர்காணல் 12: 12.02.2017)
13. R.M. அமீன், வியாபாரி, பதுளை. (நேர்காணல் 13: 24.02.2017)